Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 30 (15 - 08 - 1991) வியாழக்கிழமை ஓசை: 178

## பரீட்சைப் பெறுபேறுகள் எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டுக்குரிய கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையினதும், புலமைப்பரிசில் பரீட்சையினதும் பெறுபேறுகள் வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மேற்படி பெறுபேறுகளை உடனடியாக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பரீட்சை ஆணையாளரைக் கோரும் விசேட (4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்பு

# எனது தனிப்பட்ட ரீதியிலான முடிவு

### சிறிலங்கா முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.

(கொழும்பு)

1987 இல் இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்தாகிய போது சர்வசன வாக்கெடுப்பு வரை வடக்கையும், கிழக்கையும் தற்காலிகமாக இணைப்பதென எடுக்கப்பட்ட முடிவு தனது தனிப்பட்ட முடிவு என சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா பி. பி. ஸி நிருபர் ஸ்ரேரினுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

யுத்தத்தை நிறுத்துவதற்காகவே அமைச்சர்களோடும் பாராளுமன்றக் குழுவோடும் கட்சிக் கமிட்டியோடும் கலந்தாலோசித்த பின்பு இலங்கை-இந்திய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டேன். ஆனால் சர்வஜன வாக்கெடுப்புவரை தற்காலிகமான வடக்குகிழக்கு இணைப்பது சம்பந்தமாக

(4ஆம் பக்கம் பார்க்க)

---

### புலிகளுக்கு வைத்த கண்ணி

## தவறுதலாக வெடித்து மூன்று இராணுவம் பலி

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்று சந்தேதிக்கப்படும் பகுதியில் கண்ணிவெடிகளை வைக்க முயன்ற இராணுவத்தினர் மூவர் தவறுதலாக கண்ணிவெடி வெடித்தமையால் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

### சிங்கப்பூரில் இருந்து தங்கம் கடத்தல்

## இராணுவ அதிகாரி தொடர்ந்தும் விசாரணையில்

(கொழும்பு)

பெறுமதி மிக்க தங்கப் பாளங்களையும், தங்கமுலாம் பூசிய கைக்கடிகாரங்கள் 3000 த்தையும் கடத்தியதுடன் சம்பந்தப்பட்டோர் என்ற வகையில் கைது செய்யப்பட்ட மேஜர் உடுகம்பொலவும் மற்றும் ஒரு இராணுவ அதிகாரியும் அவரின் காதலியும் நீதிமன்றத்தால் விதித்த தண்டப் பணத்தை கட்ட முடியாது போனதால் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தண்டப் பணமாக ரூபா ஆறு கோடி விதிக்கப்பட்டது. அதேவேளை மேஜர் உடுகம்பொல தொடர்ந்தும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும், மேலும் பல்வேறு கடத்தல்களுக்கும் இவருக்கும் இடையில் தொடர்பு இருக்கலாம்

(4ஆம் பக்கம் பார்க்க)

### பிணையில் விடப்பட்ட ராணுவத்தினர்

## நீதிமன்றத்திற்கு வெளியில் மீண்டும் பொலிஸால் கைது

(கொழும்பு)

கைலஞ்சம் பெற்றுக் கொண்டு வடபகுதிக்கு பொருள்களை செல்ல அனுமதித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட ஒன்பது இராணுவத்தினரும் நீதிமன்றத்துக்கு வெளியே மீண்டும் கைது செய்யப்பட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சையை விரைவில் நடாத்த ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கல்விப்பொது தராதர உயர்தரப் பரீட்சையை நடாத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். இதனால் பரீட்சை காலக்கிரமத்தில் நடைபெறுவதற்குரிய புதிய சாத்தியக்கூறுகள் தோன்றியுள்ளன.

பரீட்சை தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் யாழ் கல்விப்பணிப்பாளருக்குநேற்று நண்பகல் ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் ஊடாக அனுப்பிவைத்த அவசரச் செய்தி ஒன்றில் தற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஒப்பந்தம் மூலம் சென்ற

## இந்திய வம்சாவழியினரும் தமிழக பொலிசாரால் கைது

(கொழும்பு)

மலைநாட்டிலிருந்து சிறிமா சாஸ்திரிஒப்பந்தத்திற்கிணங்க தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பட்டோரும் பொலிசாரால் கைது செய்யப்படுகின்றனர். இவர்கள் பொலிசாரால் கைது செய்யப்படும் போது தாம் ஒப்பந்தம் மூலம் இந்தியா வந்தவர்கள் என்றும் இந்திய பிரஜா உரிமை பெற்று விட்டவர்கள் என்று கூறியதற்கு தமிழகப் பொலிசார் 'நமக்கு இந்த ஒப்பந்தங்கள் எல்லாம் ஒன்னும் தெரியாதையா மேல் த்தில இருந்து ஆர் வந்தால் உடன வெளியில விடுவம்' என்று கூறுகின்றனராம்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு இணங்க தமிழ்நாட்டின் நீலகிரி பகுதியில் குடியேறியமர்கள் வேலை தேடி சென்னைக்குச் செல்லும் போது பொலிசாரால கைது செய்யப்பட்டு உள்ளே தள்ளப்படுவதாகவும் இந்தத் தொல்லைகளைப் பொறுக்க முடியாது கொழும்பு வந்த சிலர் கூறியுள்ளனர்.

சென்னையில் கைது செய்யப்படும் இந்த இந்திய பிரஜா உரிமை பெற்றோர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### சாப்தீன், வின்சன்

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவம் நேற்று நண்பகல் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த சாப்தீன் (சரவணமுத்து இராசேந்திரன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு தளர்வு

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் சாவகச்சேரி மருதங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நல்லூர் கொடியேற்றம்

நல்லூர் ஸ்ரீ கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாட்கள் நடைபெறும்.

## யுத்த நிறுத்த முயற்சி

(கொழும்பு)

கொழும்பில் மேற்கு நாட்டு அதிகாரிகள் யுத்த நிறுத்தத்திற்கு முயற்சி செய்து வருகிறார்கள் என கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது.

## களம் செல்ல மகளை ஒப்படைத்த தந்தை

(பூநகரி)

சிறிலங்கா அரசிடமிருந்து தமிழீழ மண்ணை மீட்க பூநகரியைச் சேர்ந்த ஓர் குடும்பத்தினர் தமது மகளை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்தனர்.

ஆனையிறவு மோதலைத் தொடர்ந்து பல பெற்றோர்கள் தாமே முன் வந்து தமது பிள்ளைகளை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்து மண் மீட்பு போரில் ஈடுபட களம் அனுப்பி வருவது தெரிந்ததே.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்களும் எதிர்ப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் வடபகுதிக்கான நிவாரண வினியோக நிறுத்தத்தை எதிர்த்து புனர்வாழ்வு அமைச்சுக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இடம் பெயர்ந்து முகாம்களுக்கு வெளியில் இருக்கும் மக்களுக்கும் தொழில் இழந்த மக்களுக்கும் இம்மாதம் முதல் நிவாரண வினியோகத்தை நிறுத்தி வைப்பது என்ற அரசின் முடிவை எதிர்த்துள்ளதுடன் மேற்படி நிவாரண வினியோகங்களை தொடர்ந்தும் வழங்கும் படியும் புனர்வாழ்வு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது. (க)

## யாழ். வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனையில் தொடர்ந்தும் மருந்துப்பொருள்களின் பற்றாக்குறை நிலவுகின்றது. குறிப்பாக காயங்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு வேண்டிய மருந்துப் பொருள்கள் பற்றாக் குறையாகவுள்ளது.

இவ்வைத்தியசாலைக்கு கொழும்பில் இருந்து இறுதியாக எடுத்து வரப்பட்ட மருந்துப் பொருள்களில் மேற்படி மருந்து வகைகள் மிக குறைவாகவே எடுத்து வரப்பட்டிருக்கின்றது என்றும், யாழ். போதனா மருத்துவமனை வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## வரி விளம்பரம்

**தேவை**

சவுக்கு விதை தேவை. மில்க் வைற், யாழ்ப்பாணம்.

(B/2947)

## பறவை கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் தேசிய பறவையான மயில் உட்பட 378 வகையான 10,000 பறவைகளை வெளிநாட்டுக்கு கடத்திச் செல்ல எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாக கொழும்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இந்த கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் கொழும்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

# இஸ்ரேலுடன் இந்தியா இராஜதந்திர உறவு

(டில்லி)

இஸ்ரேலுடன் இந்தியா ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தும் என இந்திய வெளியுறவு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் நிலையை நோக்கி இந்தியா விரைவாக நடந்து கொண்டிருக்கிறது என்றும் இதற்கான சூழ்நிலைகள் கனிந்து கொண்டு வருகின்றன என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## குடும்பஸ்தர் தற்கொலை

(பண்டத்தரிப்பு)

கடன் தொல்லை தாங்க முடியாத ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் அலரிவிதை அருந்தித் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று பண்டத்தரிப்பு பகுதியில் நடைபெற்றுள்ளது.

பண்டத்தரிப்பு பட்டண சபை பின் இரவுக் காவலாளியாகக் கடமையாற்றிய ந.தேவராஜா என்பவரே இவ்வாறு இறந்தவராவார். (ச)

## 300 கிராம் போதைவஸ்து

பொலிஸ் விசேட நடவடிக்கைப் பிரிவு கொழும்பில் ரூபா 3.60.000 பெறுமதியான ஹெரோயினைக் கைப்பற்றியுள்ளது. இதன் எடை 300 கிராமாகும். போதைவஸ்து வியாபாரி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் திம்பிரிக்கதேயாவில் நடமாடுகிறவர் என்றும், போதைவஸ்து இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டதன் ஒரு பகுதி என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## உடன் தேவை

பாண், பாண் சார்ந்த பொருள்கள் தயாரிப்பதில் அனுபவமுள்ள சகல தர ஊழியர்களும் உடன் தேவை.

**18-8-91 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு தொழில் அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்:**

**சுவையருவி**

மின்நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (B/2951)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை யாதவன்**
**(கந்தையா கமலக்கண்ணன்)**

வீரஜனனம்: 26--08--1969
வீரமரணம்: 14--07--1991

வரும்பகை வென்றிடவே "யாதவனே"
விடுதலைப் புலியானவன் நீ
விரும்பினாய் சுதந்திரத்தை - அதனால்
அரும்பிலே நீ மாண்டாய்!
இரும்பாக்கினோம் இதயத்தை - ஆனாலும்
நொருங்குதடா உன் பிரிவால் - அதனால்
நெருங்குவோம் இனியும் எதிரி பாசறையை...
நொருக்குவோம் உன் வழியினிலே ..

(R/1643) - உன் உயிர் நண்பர்கள்

## 32-ம்நாள்நினைவஞ்சலி

வீரஜனனம் 07-07-974
வீரமரணம் 14-07-1991



**வீரவேங்கை சுபையிர்**
**(கந்தசாமி ராசேந்திரம்)**
அரியாலை கிழக்கு)

இளமையிலே கல்வியே துகிதமென
குடும்ப சுமைதனை நீ சுமந்தாய்
உன் எண்ணச் சிறைதனில்
எதிரியின் கொடுமைதான் பதிந்ததுவோ?
உன் சின்னக் கைதனில்
நீ தூக்கினாய் ஆயுதம்
அடிமை விலங்குடைக்க
சீறும் புலியென புறப்பட்டாய்!
கட்டைக் காட்டினிலே களம் நின்றாய்
தமிழீழம் உயிர் மூச்சென்றாய்
எதிரியுடன் போர் புரிந்து - ஈற்றில்
தமிழ் மண்ணில் மலரானாய்

சுபையிருக்கும் இவருடன் வீரமரணம் அடைந்த சக போராளிகளுக்கும் எமது அஞ்சலி.

**ஸ்ரீமுத்து விநாயகர் சனசமூக நிலையம்**
அரியாலை கிழக்கு (R-1640)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



துணைப்படை வீரர்

**குட்டி**
**(கணேசலிங்கம் - சபேஸ்,** நல்லூர்)

வீரஜனனம் 25.01.1974
வீரமரணம் 16 07.1991

மண்ணின் மீட்பு ஒன்றே எண்ணத்தில் நிறைந்திருக்க சண்டையில் நின்றவருக்கு துணையாகச் சென்றவனே - உன் எண்ணம் நிறைவேறும் வண்ணம் செயற்படுவோம்.

நண்பர்கள்.

(B/ 2954)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 08 - 15**

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலையில் எதிர்பாராத விதமாக நிகழ்ந்த வாகன விபத்தில் எமைப்பிரிந்த

**சிலன்**

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் வீரமரணமெய்திய

**மகாராஜன்** (வெ. நட்சணாமூர்த்தி -மட்டக்களப்பு)

திருக்கோணமலை பன்குளத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**பவான்** (நடராசா சரவணபவான் - சாம்பல்தீவு, திருக்கோணமலை)

1990 ஆம் ஆண்டு ஆரையம்பதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்ற நிலையில் சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய

**இளியன்** (பொன்னையா தயாளன் - ஆரையம்பதி)

அக்கரைப்பற்றில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**மேஜர் சிந்து** (சந்திரவேல் தேசிகன் - கிரான்)

**வாசு**

திருக்கோணமலை, தம்பலகாமம் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து தாக்குதல் மேற்கொண்டதில் வீரமரணமெய்திய

**கமலன்** (நடராசா கிருஷ்ணமூர்த்தி - வில்பற்றுக்குறோஸ்)

கொல்லங் கலட்டிப் பகுதியை நோக்கி தமிழீழக் கடற்பரப்பிலிருந்து சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2950)

**வாருங்கள்! வாருங்கள்!!**

30 வீத கழிவு விலையில் மரத் தளபாடங்கள் வாங்க நாடுங்கள்!

**சஞ்சீவி**

மரத்தளபாட விற்பனை நிலையம்,
இல. 31 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (B/2931)

சிந்தனைக்கு

உரிமைகளின் உண்மையான மூலம், கடமையே.

— மகாத்மாகாந்தி

ஈழநாதம்

31, மகேந்திரவீதி, யாழ்ப்பாணம், 15-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 3208
த. பெ. எண் 05

## அந்நிய தேசங்கள் அடைக்கலம் தராது

சொந்த மண்ணை விட்டு அகதிகளாக வேற்று நாட்டில் அடைக்கலம் கோரும் மக்கள் இன்று மனித நேய அடிப்படையில் நடத்தப்படுவதில்லை. அவர்கள் ஒரு குற்றவாளியாகவே தற்பொழுது கருதப்படுகின்றார்கள். ஐ. நா வின் சாசனத்தை ஏற்று அதில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான நாடுகள் கூட ஐ. நா. சாசனத்தில் அகதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்தை வழங்கத் தயாராக இல்லை.

இதற்கு அந்த நாடுகள் கூறுங் காரணம் வருபவர்கள் அகதிகள் அல்ல; பொருளாதார ஆதாயம் தேடியே வருகின்றார்கள். மேலும், குற்றச் செயல்களிலும் ஈடுபடுகின்றார்கள் என்பதாகும், ஆனால், முழுமையாக அது ஏற்புடையதெனக் கொள்ள முடியாது. ஏனெனில் உயிரைப்பாதுகாப்பதற்காக பலவகை ஆபத்துக்களையும் எதிர்கொண்டே அகதிகள் மற்ற நாடுகளுக்குச் செல்கின்றார்கள். ஈராக்கில் இருந்து துருக்கிக்குச் சென்ற குர்திஷ் அகதிகளையோ அன்றி இலங்கையின் வடக்குக் கிழக்கில் இருந்து தமிழகம் சென்ற தமிழ் அகதிகளையோ அன்றி வியட்னாமில் இருந்து கொங்கொங் சென்ற மக்களையோ எவ்வாறு பொருளாதார நோக்குடன் சென்றார்கள் எனக் குறிப்பிடமுடியும்?

மேலும், நெருக்கடியை எதிர்நோக்கி நாட்டைவிட்டு வெளியேறும் மக்கள் எவ்வாறு பாதுகாப்பு அற்றதும், மேலும் நெருக்கடி மிக்க நாடொன்றிற்கும் செல்வார்கள்? அதாவது ஈராக்கில் உணவுத் தட்டுப்பாடு என்பதற்காக உணவுப் பஞ்சம் நிலவும் எத்தியோப்பியாவிற்கு எவ்வாறு அவர்கள் செல்ல முடியும்?

இன்று அல்பேனியாவில் இருந்து இத்தாலி வந்து சேர்ந்த 10 000க்கும் மேற்பட்ட மக்களை இவர்கள் அகதிகள் அல்ல; பொருளாதார நோக்கில் வந்தவர்கள் எனக் கூறி இத்தாலி கப்பல்களிலும் விமானங்களிலும் அல்பேனியாவிற்கு திருப்பி அனுப்புவதில் தீவிரமாக உள்ளது. இதன் காரணமாக அகதிகளாக வந்தவர்கள் விளையாட்டு மைதானங்களிலும், திறந்த வெளிகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். போதிய மருந்து, உணவு வழங்கப்படவில்லை. கொங்கொங்கைப் பொறுத்தும் வியட்னாம் அகதிகளை வெளியேற்றுவதில் அரசாங்கம் தீவிரமாகவுள்ளது.

பிரிட்டன் இவற்றை விட ஒருபடி மேலே போய் பிரிட்டன் வரும் வெளிநாட்டவர் - அகதிகள் - அனைவரும் 'கிரிமினல்' குற்றவாளிகள் என்ற ரீதியில் பார்வையைச் செலுத்தத் தொடங்கியுள்ளது. இதன் ஒருகட்டமாக பிரிட்டனுக்குள் வருபவர்கள் அனைவரும் தமது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற யோசனையை அந்தநாட்டு உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில், இன்று இலங்கைத் தமிழரைப் பொறுத்தும் அதே நிலை தான் ஆனால், வேறு எந்த நாட்டிலும் இல்லாதவாறு இலங்கைத் தமிழ் அகதிகள் துன்புறுத்தப்படுகின்றார்கள். கேவலமாக நடத்தப் படுகின்றார்கள்;

அதேவேளை இந்த அகதிகள் விடயத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கும் சில நாடுகள் இந்த அகதிகள் விவகாரத்திற்குத் தாங்களே காரணகர்த்தாக்கள் என்பதையும் மறந்து விடுகின்றன இலங்கையில் இருந்து பிரிட்டன் வரும் அகதிகளினால் பெரும் நெருக்கடி எனக் கூறும் பிரிட்டன் இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தாம் வித்திட்டதை மறந்து விட்டார்கள். தமது காலனி ஆதிக்க நலனுக்காக இலங்கையில் சிறுபான்மையினரின் நலனைப் பிரிட்டன் பெரும்பான்மையினரிடம் பலியிட்டது இதன் காரணமாகவே இன்று இலங்கையில் இனப்பிரச்சினை வெடித்துள்ளது.

இதேபோன்று தனது நலனுக்காக இந்தியாவும் இலங்கைத் தமிழரின் நலனைப் பலியிட முன்வந்துள்ளது. இலங்கைத் தமிழர் தாயகத்தை கூறுபோடப் பார்த்தது. தனது நலனுக்காக தமிழரைக் கொன்று குவித்தது

இவ்வாறிருந்தும் இந்த நாடுகள் தமது நடத்தையால் இந்த நாடுகளின் அரசியலில் ஏற்பட்ட சிக்கல்களையும், நெருக்கடியையும் கருத்திற் கொள்வதாக இல்லை. அதற்குப் பரிகாரம் காண முயற்சிப்பதாகவும் இல்லை. அகதிகள் கிரிமினல்களாகவும், வேண்டத்தகாதவர்களாகவும் தமக்கும் அகதிகளுக்கும் சம்பந்தம் எதுவும் கிடையாது என்ற ரீதியிலும் செயற்படுகின்றன.

இதேவேளை, சொந்த நாட்டை விட்டு அகதிகள் என்ற ரீதியில் வெளியேறுபவர்களும், வெளியேறியவர்களும் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அந்நிய மண் எவருக்கும் எப்பொழுதும் பாதுகாப்பு தந்ததாக வரலாறு இல்லை. நெருக்கடி மிக்க வேளையில் எமது பாதுகாப்பிற்காக நாம் போராடக் கூடிய உரிமை கூட சொந்த மண்ணில் உள்ளோருக்கே உண்டு. வேற்று மண்ணில் ஒருவர் நிம்மதியாக நீண்ட நாள் வாழலாம் என்றால், உலகில் நாடுகளுக்கு இடையில் எல்லைகள் இருப்பதென்பது இதுவரைக்குள் அர்த்தமற்றதாகியிருக்க வேண்டும்.

# 'டடா' பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் ராஜீவின் கொலை விசாரணை

ராஜீவ்காந்தியின் கொலை வழக்கு விசாரணை 'டடா' (TADA) என்ற பயங்கரவாதிகளின் தடுப்புச் சட்டத்தின் (Terrorist and Disruptive Activities (Prevention) Act) கீழ் நடத்தப்படுகிறது.

பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் பயன்படுத்தப்பட்ட 'டடா' பயங்கரவாத தடுப்புச் சட்டம் ராஜீவ்காந்தியின் கொலைக்குப் பின்னர் தமிழகத்திற்கு விரிவுபடுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

இச் சட்டத்தின் கீழ் தான் மத்திய புலனாய்வுக்குழு (சி. பி. ஐ.) ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணையை நடத்துகிறது.

இச்சட்டத்தில் பல குறிப்பிட்ட அம்சங்கள் உள்ளன. பொதுவாக, மிகப் பெரிய கொலை வழக்கு போன்றவற்றில் கூட குற்றவாளிகளை பதினான்கு நாட்கள் வரை தான் நீதி மன்றக் காவலில் வைக்க அனுமதி உண்டு. பதினான்கு நாட்களுக்குப் பிறகு நீதிமன்றத்தின் அனுமதியுடன் மீண்டும் காவல் நீடிப்பு கோர முடியும்.

ஆனால், 'டடா' சட்டப்படி கைது செய்யப்படும் குற்றவாளிகளை அறுபது நாட்கள் வரை நீதிமன்றக் காவலில் வைக்க முடியும்.

சாதாரண சட்டப்படி கொலை வழக்குச் சம்பந்தமான குற்றப் பத்திரிகையை 90 நாட்களுக்குள் நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

ஆனால் இந்தச் சட்டப்படி ஒரு வருடத்துக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தால் போதுமானதாகும்.

குறிப்பாக, இந்த வழக்கில் நீதிமன்றத்தில் சாட்சிகள் பெயர் சொல்லத் தேவையில்லை. அத்துடன் 'டடா' சட்டப்படி குற்றவாளிகள் பிணையிலும்செல்லமுடியாது.

உயர் நீதி மன்றத்திலோ, உச்ச நீதிமன்றத்திலோ கூட ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் பிணை பெற்றுச்செல்ல முடியாது. ராஜீவ் கொலை வழக்கு உள்ள நீதி மன்றம் கூறினால்தான் ஜாமீனில் குற்றவாளிகள் செல்லமுடியும்.

ராஜீவ் கொலை வழக்கில் கைதான திராவிடர் கழகத் தொண்டர் பேரறிவாளன் ஹேபியஸ்கார்பஸ் மனுபோட்டும் கூட, உயர் நீதி மன்றத்தில் விடுதலை செய்யப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

'டடா' சட்டப்படி கொலை வழக்குக்கு விசேட நீதி மன்றத்தை வைத்துக் கொள்ளலாம். அதன் படி, ராஜீவ் கொலை வழக்குக்கும் சென்னையில் விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மண்ணை ஆக்கிரமிக்க சிறிலங்கா துடியாய் துடிக்கிறது

- பரா

தமிழருக்குஎதிராகபோராட இராணுவத்தில் சேருங்கள் என்று சிறிலங்கா அரசு, பத்திரிகைகள், அரசியற் கட்சிகள் சிங்கள இளைஞர்களுக்கு அறைகூவல் விடுக்கின்றன.

அண்மையில் சிங்கள பெண் ஒருவர் தனது 3ஆவது மகனையும் இராணுவத்தில் கொண்டு சென்றுசேர்த்ததை கொழும்பு பத்திரிகைகள் முதல் பக்கச் செய்தியில் பிரசுரித்ததை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இதை தமிழீழத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு தமிழ் மகனும் சிந்திக்க வேண்டும். எங்களுடைய பிரதேசத்தை ஆக்கிரமித்து இந்த நாட்டை ஒரு சிங்கள நாடாகஆக்கஅரசு இன்று துடியாய் துடிக்கிறது. இதை நாங்கள் தடுத்து நிறுத்தி எமது பிரதேசத்தை மீட்க வேண்டுமாக இருந்தால் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் போராட வேண்டும். எமது மண்ணை பறிக்க ஒரு சிங்களத்தாய் தன்மகனை இராணுவத்தில் சேர்ப்பதென்றால் ஆண்டாண்டு காலம் சிங்கள ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் எமதுபெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை இப் போராட்டத்தில் கொண்டு வந்து இணைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

இவ்வாறு நேற்று முன்தினம் சண்டிலிப்பாயில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணிப்பிரமுகர் பரா தெரிவித்தார்

மேலும் அவர் பேசுகையில் இன்று சிங்கள தலைவர் பிரேமதாசாவில் இருந்து இராணுவத் தளபதிகள் வரை இந்த ஆணையிறவு சண்டை பற்றி கருத்துக் கூறியுள்ளனர். பிரேமதாசா அவர்கள் கூறுகின்றார் இச் சண்டையில் யாருக்கும் வெற்றி தோல்வி இல்லை என்று இராணுவத் தளபதிகள் இப்போரில் தங்கள் இழப்புக்களை ஒத்துக்கொள்கின்றனர். இருப்பினும் இனியும் இராணுவ நடவடிக்கை மூலம் இப்போராட்டத்தை தோற்கடிக்கலாம் என்று பகல் கனவு காண்கின்றனர்.

எதிரிக்கு நன்றாகத் தெரிகின்றது எமது ஆயுதப் போராட்டத்துடன் ஒருசமூக மாற்றமும் வளர்ச்சியும் ஏற்படுகின்றதென்றும் எமக்கான ஒரு தனியான பொருளாதாரம், தொழில்நுட்பம், கலை பண்பாட்டு வளர்ச்சி, சமூக ஒடுக்குமுறைகள் குறைந்து போகின்றது, என்பது தெரிகிறது. இந்த நிலை ஒரு தனி நாட்டை நோக்கி நகர்வதை சுதந்திர தமிழீழம் மலர்வதற்கான அறிகுறிகள் தென்படுவதை எதிரியான சிறிலங்காவும் இதற்கு உதவுகின்ற ஏகாதிபத்தியநாடுகளும் உணர்ந்து இப்போராட்டத்தை மழுங்கடிக்க முனைகின்றார்கள். ஒரு ஒடுக்கப்பட்ட இனம் தனது விடிவிற்காக விடுதலைக்காக கிளர்ந்து எழும்புமானால் யாராலும் தடுத்து நிறுத்த முடியாதென்பதை எமது தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகிற்கு எடுத்துக் காட்டும் என்று கூறினார்.

இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஆர்த்தி, மக்கள் முன்னணி உறுப்பினர் சலீம் அவர்களும் கருத்துரை வழங்கினர்.

# காங்கிரஸ் தலைவர்களுக்கு சாட்சியமளிக்கக் கட்டளை

(சென்னை)

ராஜீவ்காந்தியின் கொலைக்கு வழிவகுத்த பாதுகாப்புக் குறைபாடுகள் பற்றி விசாரணை நடாத்தும் நீதியரசர் ஜே. எஸ். வர்மா ஆணைக் குழு இந்திராகாங்கிரஸ் தலைவர்களையும் சாட்சியமளிக்கக் கட்டளை பிறப்பித்துள்ளது.

இந்திராகாங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வி ஜெயந்தி நடராஜனுக்கும், திருமதி மரகதம் சந்திரசேகருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. இருவரும் ராஜீவ்காந்தி கொலை செய்யப்படும்போது ஸ்தலத்தில் இருந்தவர்கள்.

அனைத்து இந்திய இந்திரா காங்கிரஸ் முன்னாள் செயலாளர் ஜி. கே. மூப்பனாரையும் தனது முன்னிலையில் ஆஜராகும் படி ஆணைக்குழு பணித்துள்ளது.

பாதுகாப்பு ஒழுங்குகளுக்குப் பொறுப்பாக இருந்த உயர் அதிகாரிகளுக்கும் இவ்வாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

# மென்பந்துகிரிக்கெட்போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

நொதேர்ண் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் ஆதரவில் நடைபெறும் நொக்கவுட் மென்பந்து கிரிக்கட் போட்டி "போர்க்" வெற்றிக் கிண்ணத்திற்கான 11பேர் கொண்ட 20 ஓவர் போட்டியும். நொதேர்ண் ஸ்போட்ஸ் சஞ்சிகை வெற்றிக் கிண்ணத்திற்கான 6 பேர் கொண்ட 6 ஓவர் போட்டியும், 17 வயதிற்குட்பட்ட 10 ஓவர் போட்டியும் வெள்ளிக்கிழமை 23 ஆம் திகதி செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும்.

இப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்காத கழகங்கள் பங்குபற்ற விரும்பினால் திரு இ. இராஜேந்திரராஜா "நொதேர்ண் ஸ்போட்ஸ் ஆசிரியர்" 136, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர் முத்திரைச் சந்தை அருகாமையில் 19 ஆம் திகதிக்கு முன்பு 2 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் சமர்ப்பிக்கவும். (42)

யாழ் முறைசாராக் கல்விப் பிரிவால்

# வயது வந்தோருக்கான கல்வித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு வயது வந்தோருக்கான கல்வித் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பிரதேசத்திற்குப் பொருத்தமான கல்வி, சமூக மேம்பாட்டுத் திட்டமிடல் ஆகிய இருவிடயங்கள் தொடர்பாக இராமநாதன் கல்லூரியில் இம்மாதம் 19, 20, 21 ஆம் திகதிகளிலும், கனகரத்தினம் ம ம. வித்தியாலத்தில் 26, 27, 28 ஆம் திகதிகளிலும் காலை 8.00 மணி முதல் மாலை 2.00 மணி வரையும் நடைபெறும்.

இவ் வகுப்புக்களில் பங்குபற்ற விரும்புபவர்கள் அவ்வப் பாடசாலைகளில் அமைந்திருக்கும் முறைசாராக் கல்வி வள நிலையப் பொறுப்பாளரிடம் தமது பெயர்களைப் பதிவு செய்யும்படி கேட்கப் படுகின்றனர். (க)

# இன்றும், நாளையும் ஓய்வூதியக் கொடுப்பனவு

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் ஆனி மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு இன்றும் நாளையும் பணமாக வழங்கப்படுமென்று பிரதான முகாமையாளர் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் சகல திணைக்கள மற்றும் கூட்டுத்தாபன அதிகாரிகள் இன்றுகாலை 8.00 மணிக்கு தத்தமக்குரிய காசோலைகளுடன் வங்கிக்கு சமுகமளிக்கும்படி வேண்டப்பட்டுள்ளது.

## மகாராஜா நிறுவனத்திடம்

# சீதுவை எண்ணைகொழுப்பு கூட்டுத்தாபனம்

மக்கள் மயமாக்கல் என்ற திட்டத்தின் கீழ் . திறைசேரியின் ஒருவர் தீர்மானித்ததன்படி 70 கோடி ரூபா பெறுமதியான சீதுவை எண்ணைக் கொழுப்புப் பொருள் கூட்டுத்தாபனம் மகாராஜாஸ்தாபனத்துக்கு விற்கப்பட்டுள்ளது என கொழும்புச் செய்திகள் சில கூறுகின்றன.

மேலும் துல்கிரிய தொழிற்சாலை கொரியா நாட்டிற்கு கையளிக்கப்பட்டுவிட்டது என்றும், பூகொடை நெசவாலை இந்தியமுதலாளிகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அச்செய்திகள் கூறுவதுடன், இதற்கு ஊழலும், லஞ்சமுமே காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோலவே பேருந்துச் சேவையும் அரசியல், பழிவாங்கல், ஊழல் என்பன காரணமாக தகாத முறைகளில் திசை திருப்பபட்டதனால் போக்குவரத்துச்சேவைபாதிப்படைந்துவிட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# மாதவ்ராவ் சிந்தியா வீடு தாக்கப்பட்டது

(டில்லி)

மத்திய விமானத்துறை அமைச்சர் மாதவ் ராவ் சிந்தியாவை 150 பாரதீய ஜனதா தொண்டர்கள் அவரது வீட்டில் தாக்குவதற்கு முயற்சி செய்ததாக கூறி இந்திராகாங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று லோக்சபாவில் குழப்பம் ஏற்படுத்தினர்.

பாரதிய ஜனதாக் கட்சிக்கு எதிராக மாதவ் ராவ் சிந்தியா வெளியிட்ட கருத்து குறித்து ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் தெரிந்ததே. பின்னர் இவை லோக்சபாவிற்கு வெளியேதான் கதைக்கப்படும் என இரு சாரார் மத்தியிலும் ஒப்புக் கொள்ளப் பட்டிருந்தது.

ஆனால் நேற்றுக் காலை மாதவ் ராவ் சிந்தியாவை தாக்க முற்பட்டதற்குப் பின்னர் மீண்டும் இச் சர்ச்சை லோக்சபாவில் ஏற்பட்டுள்ளது இதனால் லோக் சபாக் கூட்டம் ஒரு மணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டது.

மாதவ் ராவ் சிந்தியாவின் வீட்டில் பல வண்டிகள் தாக்கி சேதமாக்கப்பட்டன என்றும், இந்தத் தாக்குதலில் வேறு பலரும் காயமடைந்தார்கள் என்றும் காங்கிரஸ் உறுப்பினர்கள் லோக்சபாவில் தெரிவித்தனர்.

இரத்தக் கறை படிந்த சட்டைகளைக் கூட சபையில் எடுத்துக் காட்டி, மாதவ் ராவ் சிந்தியாவின் மெய்க்காப்பாளர் பலத்த காயத்திற்கு உட்படுத்தப்பட்டார் என்றும் அந்த உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து உள்துறை அமைச்சர் அறிக்கையொன்று வெளியிட வேண்டும் என்றும், எதிர்க் கட்சித் தலைவர் எல் கே அத்வானி மன்னிப்புக் கேட்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

---

**பரீட்சையை**

போதையசூழ்நிலையில் இடம் பெயர்ந்த மற்றும் வெளி மாவட்டமாணவர்கள் தொடர்பான விபரங்களைக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து கோரியுள்ளார்.

மேலும் இவ்வாறான மாணவர்களுக்கான சுட்டிலக்கத் தொகுதி ஒன்று யாழ். மாவட்டத்திற்கு எடுத்து வரப்படவிருக்கும்வினாத்தாள்களுடன் அனுப்பி வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பரீட்சை தொடர்பான மேலதிக அறிவுறுத்தல்களுக்கும், பரீட்சைக்கான ஏற்பாடுகளுக்கும் கல்வித்திணைக்களத்தை எந்நேரமும் தயாராக இருக்கும்படியும் அச் செய்தியில் கேட்கப்பட்டுள்ளது. மேற்படி செய்திக்கு யாழ். கல்விப்பணிப்பாளர் நேற்றமாலையே பதில்செய்தி ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

எனவே மேற்படி பரீட்சை காலக்கிரமத்தில்ஆரம்பமாகும் என்றும், இதற்காக விசேட வினாத்தாள்கள் தயாராகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க

---

**களம்**

நேற்று முன்தினம் 13ஆம் திகதி செல்விபுரம் பூநகரியைச் சேர்ந்த வி. சந்திரசேகரன் என்பவர் தமது மகள் மாலினி (வயது 16) என்பவரை பூநகரிப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

# இன்று இல்லை நாளை

(யாழ்ப்பாணம்)

இன்று காலை ''பாலம்'' பணிமனையில் நடைபெற இருந்த போராளிகளைப்பராமரிப்பதில் ஈடுபட இருக்கும் அமைப்புக்களின் கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை பிற்பகல் நான்கு மணிக்கு நடைபெறும் என்றும் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் படியும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது

---

**நீதிமன்றத்திற்கு**

இவர்கள் விசாரணைக்குட்படுத்தப்படும்போது விசாரணை நடாத்திவரும்பொலிஸ் அதிகாரிகளுக்கு தொலைபேசியில் கொலைப்பயமுறுத்தல் வந்ததாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது இருந்தும் நீதிபதியால் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆனால் நீதிமன்றத்துக்கு வெளியே வைத்து இரகசிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதாக கொழும்பு செய்திகள் கூறுகின்றன.

---

**இராணுவ**

என்று சந்தேகிக்கப்படுவதால் விசாரணைகள் தொடர்வதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன என்று கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

# அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்வித் திட்டத்தின் போதனாசிரியர்களுக்கான அவசர கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கும், பத்திரிகையியல் பயின்ற மாணவர்களுக்கான கூட்டம் இதேதினம் காலை 10-00 மணிக்கும் கல்வித் திணைக்களத்தில் நடைபெறும். அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி கல்வி அதிகாரி கேட்டுள்ளார். (க)

# ரவிச்சந்திரன் சாதனை

(திருக்கோணமலை)

தென் தமிழீழத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் முதல் முறையாக நான்கு விசேட சித்திகளைப் பெற்ற ('ஏ') மாணவனாக திருக்கோணமலை இந்துக்கல்லூரியைச் சேர்ந்த குலசேகரம் ரவிச்சந்திரன திகழ்கிறார்.

இவர் லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கு புலமைப்பரிசில் பெற்றுச் செல்லவுள்ளார்.

# பேராலயத்தில் திருட்டு

(குருநகர்)

யாழ். பேராலயத்தில் நேற்று முன்தினம் (13-8-91) இரவு திட்டமிடப்பட்ட திருட்டு நடைபெற்றுள்ளது.

சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட எறிகணை, விமானக் குண்டு வீச்சுகளால் சேதம் அடைந்துள்ள கூரை வழியாக கோயிலுள் சென்ற திருடர்கள் மாதா விக்கிரகத்தில் இருந்த தங்கம் அல்லாத நகைகள், உண்டியல் பணம், ஆயர் பூசைக்குப் பயன்படும் பாத்திரத்தின் கீழ்பகுதி என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருட்டை நடத்தியகோஷ்டி ஆலயத்தின் களஞ்சிய அறையைச் சேதப்படுத்தி இருப்பதாகவும் கூறப்பட்டது மேற்படி ஆலயத்தில் இன்று (15-8-91) வருடாந்ததிருநாள் கொண்டாட்டங்கள் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (21)

---

**பரீட்சைப்**

செய்தி ஒன்றை யாழ் பிராந்தியக்கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அனுப்பி வைத்துள்ளார்,

அத்துடன் ஆங்கில ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை மற்றும் தாதியருக்கான போட்டிப் பரீட்சை ஆகியவை தொடர்பான விபரங்களையும் உடன் அறிக்கும்படியும் அச்செய்தியில் கோரப்பட்டிருக்கின்றது. (க)

---

**வீரவணக்கம்**

மருதங்குளம், புத்துவெட்டுவான், கிளிநொச்சி) வீரமரணமடைந்தார். இதே வேளை கட்டைக்காட்டுப் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த வின்சன் (முத்துராசா சுரேஸ்குமார், புல்மோட்டை, திருமலை) வீரமரணமடைந்தார். இவர்கள் இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

---

**ஊரடங்கு**

கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய இடங்களில் நீக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது

இதேபோல கிளிநொச்சி மாவட்டத்திலும், பச்சிலைப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கிளிநொச்சி கிராம சேவகர் பிரிவு நீங்கலாக கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய இடங்களில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதாக அலுவலகம் அறிவித்துள்ளது.

## தனியார் கல்வி நிறுவனம்

# உரிமையாளர், ஆசிரியர் பொதுக் கூட்டம்

தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களுக்கும், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான விசேட பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென்மராட்சிக் கோட்டத்தினருக்கான பொதுக்கூட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கும் வடமராட்சி கோட்டத்தினருக்கான பொதுக்கூட்டம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மகளிர் பாடசாலை மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கும் நடைபெறவுள்ளது. இக் கூட்டங்களில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது சமுகம் அளிக்குப்படி தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியப் பொதுச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சீதனக் கொடுமை 3 வரு. 11,000 பேர் கொலை

(டில்லி)

இந்தியாவில் சீதனக் கொடுமை காரணமாக கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 11,000 மனைவியர் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது

இந்தியப் பாராளுமன்றத்தில் இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி, 1988இல் 2209 பேரும் 1990இல் 4835 பேரும் கொலையுண்டுள்ளனர்.

1961ஆம் ஆண்டுமுதல் இந்தியாவில் சீதனம் கேட்பது தடை செய்யப்பட்டிருந்தது, ஆனால் சமுதாயத்தில் அதைக் கொடுக்க வேண்டிய நிலை தொடர்ந்து பெருகி வருவதாக பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

1988, 89, 90ஆம் ஆண்டுகளில் சீதனக் கொடுமையினால் 11,259 பேர் கொல்லப்பட்டனர் என்றும், இவர்களில் 4038 பேர் தற்கொலை செய்து கொண்டனர் என்றும் பாராளுமன்ற பெண் உறுப்பினர் தெரிவித்தார்.

# தீவிரவாதிகளுடன் பேச வெங்கட்ராமன் விருப்பம்

(டில்லி),

காஷ்மீர், பஞ்சாப், அஸாம் பகுதிகளில் பிரிவினை கோரிப் போராடும் தீவிரவாதிகளுடன் மத்திய அரசு பேச்சு நடத்த விருப்பம் கொண்டுள்ளதாக இந்திய குடியரசுத் தலைவர் விடுத்த நாற்பத்து நான்காவது சுதந்திர தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

மேலும், மதத்தின் பெயராலும், சமூக நீதிகள் காரணமாகவும் வருந்தத்தக்க பிரிவினைகள் உருவாக்குவதை விட்டுவிட்டு உண்மையான தேசியக் கண்ணோட்டத்தை வளர்க்க முன்வருமாறு நாட்டு மக்கள் அனைவரையும் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் கேட்டுக்கொண்டார்.

# இன்று இந்திய சுதந்திர தினம்

(டில்லி)

இந்தியாவின் 44வது சுதந்திர தினம் இன்றாகும் சுதந்திர தினத்தையொட்டி இந்தியப் பிரதமர் பி வி. நரசிமம ராவ் இன்று டில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுவார்

# விவசாய திட்டக்கடன் அனைத்தும் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட இலங்கை வங்கி சகல விவசாயக் கடன் திட்டங்களையும் நிறுத்தியுள்ளது.

உப-உணவு உற்பத்தி மற்றும் ஏனைய விவசாய முயற்சிகளுக்கென இலங்கை வங்கி நடைமுறைப்படுத்தி வந்த நீண்டகால, குறுகியகால கடன் திட்டங்கள் யாவற்றையும் நிறுத்தியுள்ளது.

கடன் திட்டங்களை மீண்டும் செயற்படுத்துவதற்கு அனுமதி தரும்படி கொழும்பு தலைமை அலுவலகததை யாழ். மாவட்ட இலங்கை வங்கி அலுவலகம் கோரியுள்ளது. (க)

# ஹமில்டன் பதவிக் காலம் நீடிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரது பதவிக்காலம்இன்றுடன் முடிவடைகின்ற போதும் அவருக்குசேவை நீடிப்புவழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது இதனை ஹமில்டன் வனசிங்காவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

---

**இந்திய**

பல நாட்களை தமிழக பொலிஸ் நிலையங்களில் கழிக்க வேண்டியிருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

---

**வடக்கு கிழக்கு**

நான் தனித்தே முடிவு செய்தேன் அவ்வாறு செய்யாவிடில் ஒப்பந்தம் கைச்சாத்தாகியிராது என்று ஜே.ஆர் ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

இந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறுகையில், ஒரு இலங்கைஜனாதிபதிக்கு தன்னைப் பற்றியோ கட்சியைப் பற்றியோசிந்திக்காதுமுடிவுகளை எடுக்கக் கூடிய இயல்பு இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

ஒரு இடத்தில்பி.பி.ஸி. நிருபர் ஜே.வி பி. தொடர்பாக உங்களுடைய கட்டளைகளினால் மக்கள் கொல்லப்படுவார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும்இது உங்களுக்குக் கவலை தரவிலலையா என்று கேட்டதற்கு சிறிதளவும் இல்லைஎன்று பதில்கூறினார்.

மேலும் ஜே. பி. பி. கிளர்ச்சியை முறியடிக்கும்படி கட்டளை இட்டபோது இரவில் நித்திரை இன்றிக் கஷ்டப்பட்டீர்களா என்பதற்கு என்றுமே இல்லை என்றார்.

நீங்கள் செய்த தவறுகள் எவை என்று கேட்டபோது அதைப்பற்றி சிந்திக்கவில்லை என்று கூறினார்.

என்னசாதனைபற்றிநீங்கள் பெருமைப்படுகின்றீர்கள் என கேட்ட போது பெருமைப்படவில்லை, ஆனால் ஐ. தே. கட்சியை 1956ஆம் ஆண்டு அது தோல்வி அடைந்த பின்னர் மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வந்ததே சிறந்த சாதனை என்றார்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது